தொழிலதிபர்களே...
விவசாயிகளே...
உங்களுக்கு தேவையான
புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட
● மின்சார மோட்டர்கள்
5 H.P. - 6 H.P. - 10 H.P. - 15 H.P. மற்றும்
● கிணியர்ஸ் நீரிறைக்கும் யந்திரங்கள்... அனைத்துக்கும்
இ. சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் — போன்: 234

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 30 வைகாசி 18 இதழ் 110
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 1 6 78

விஜயம் செய்யுங்கள்...
உங்கள் பாதங்களுக்கு இதமான....
பாட்டா
பாதணிகளின் மிகச் சிறந்த தேர்வுக்கு...
இ. சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் — போன்: 284

# பனம்பொருள் அபிவிருத்திச் சபை: ஏழு உறுப்பினர் நியமனம்

## தலைமைக் காரியாலயம் யாழ்ப்பாணத்தில்

(கொழும்பு)

ஏழு அங்கத்தவர்களைக் கொண்ட பனம்பொருள் அபிவிருத்திச்சபை ஒன்றை தோட்டக் கைத்தொழில் அமைச்சர் [illegible] ஜெயவர்த்தனா அமைத்துள்ளார். இச்சபையின் தலைமைக் காரியாலயம் யாழ்ப்பாணத்தில் இயங்கும். சபையின் தலைவராக திரு கே வி நித்தியானந்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

பனம் பொருள் அபிவிருத்திச் சபை பற்றித் தோட்டக் கைத்தொழில் அமைச்சர் திரு எம். டி. எச். ஜெயவர்த்தனா கருத்துத் தெரிவிக்கையில் பனம் பொருள் உற்பத்தியை அபிவிருத்திசெய்து ஏற்றுமதி செய்வதே இச்சபையின் நோக்கமாக இருக்குமென்றும், இதற்காகப் பனம்பொருள் ஆராய்ச்சி நிலையமொன்று உடனடியாக நிறுவப்படுமென்றும், இதுவே சபையின் முதற் பணியாக இருக்குமென்றும் கூறினார்.

### சபை உறுப்பினர்

பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் தலைவராக திரு. கே. வி நித்தியானந்தா நியமிக்கப்பட்டுள்ளார். ஏனைய உறுப்பினர்களாகக் கடமையாற்ற

[6ம் பக்கம் பார்க்க]

## ஆடம்பர கார்களுக்கு தடை உத்தரவு!

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து ஆடம்பரக் கார்கள் இறக்குமதி செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது!

வர்த்தகஅமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியின் [illegible] எப்பட்டிருக்கும் இத்தடை உத்தரவு இன்றுமுதல் அமுலுக்கு வருகிறது.

அன்பளிப்பாகவோ அல்லது வெளிநாட்டில் சம்பாதித்த பணத்தின் மூலமாகவோ எக்காரணம் கொண்டும் ஆடம்பரக் கார்களை இங்கு இறக்குமதி செய்வது, புதிய உத்தரவின் மூலம் தடைசெய்யப்படுகிறது. ஆனாலும் சிறிய கார்கள், மோட்டார் வண்டிகள், லொறிகள் ஆகியவற்றை இறக்குமதி செய்ய தொடர்ந்தும் அனுமதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## லஞ்சக் குற்றச்சாட்டிலிருந்து பிரான்சிஸ் விடுவிக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

சட்டத்தரணி எஸ். பிரான்சிஸ், லஞ்சக் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டார். லஞ்ச ஆணையாளரின் அறிக்கையைத் தொடர்ந்து, யாழ் நீதிவான் திரு. கே. வி. நவரத்தினத்திற்குக் கிடைத்த அறிவிப்பையடுத்து சட்டத்தரணி பிரான்சிஸை லஞ்சக்குற்றச் சாட்டிலிருந்து விடுவிப்பதாக நீதிபதி தெரிவித்தார்.

1977ம் ஆண்டு ஜூலை 27ந் தேதி, குணரத்தினம் என்பவரிடமிருந்து இறப்புச் சாட்சிப் பத்திரம் ஒன்று வழங்குவதற்காக 50 ரூபா லஞ்சம் வாங்கியதாகக் கைதுசெய்யப்பட்ட சட்டத்தரணி பிரான்சிஸ் நீதிபதி முன் ஆஜர்செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டார். 10 நாட்களுக்குப் பின் அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

யாழ் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று காலை சட்டத்தரணி பிரான்சிஸ் ஆஜரானார்.

சட்டத்தரணி பிரான்சிஸ் சார்பில் பத்துக்கு மேற்பட்ட சட்டத்தரணிகள் ஆஜரானார்கள். இவர்கள் உதவியுடன் சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன், இவ்வழக்குத் தொடர்பாக விசாரணை நடத்திய பொலிஸாரின் நடவடிக்கை பற்றி நீதிவானிடம் எடுத்துக் கூறி பொதுமக்களுக்கு அறிவுரை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். [க-க]

## யாழ். பழைய மார்க்கட்:

## கடைத்திறப்புவிழா அடுத்த வாரம்?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பழைய மார்க்கட்டில் கட்டப்பட்ட கடைகள், இன்று முதல் கடை உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும்.

கடை உரிமையாளர்களின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒப்பந்தத்தில் உரிமையாளர்கள் கையெழுத்திட்டதும் கடைகள் ஒப்படைக்கப்படும் என்று மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

அடுத்த வாரம் அநேகமாக 10ந் தேதி காலை, கடைத் திறப்புவிழாவிற்கான ஒழுங்குகளைக் கடை உரிமையாளர்கள் செய்துவருகின்றனர். [ப]

## யாழ் நூல்நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையத்தை விருத்திசெய்யும் நோக்கத்துடன் பொதுமக்களின் கருத்துக்களை

[6-ம் பக்கம் பார்க்க]

## பஸ் ஏறும் அவசரம்:

## சக்கரத்துள் நசுங்கி இளைஞர் மாண்டார்!

(வவுனியா)

பஸ் நிலையத்திலிருந்து, பஸ் புறப்படும்போது ஓடிச்சென்று அதில் ஏற முயற்சித்தவர், அந்த பஸ் சக்கரங்களுக்குள் அகப்பட்டுத் துடிதுடித்து ஸ்தலத்திலேயே மாண்டார்.

நொச்சிமோட்டைக் கிராமத்தைச் சேர்ந்த அழகன் என்ற 25 வயது இளைஞரே இவ்வாறு பரிதாபமாக மரணத்தைத் தழுவிக்கொண்டவராவர்.

குறித்த பஸ், வவுனியா பஸ்நிலையத்திலிருந்து முல்லைத்தீவுக்குப் புறப்பட்ட சமயம் அழகன் ஓடிச்சென்று மிதிபலகையில் ஏற முயன்றதாகவும் அப்பொழுது அவர் தவறி விழுந்ததாகவும், விழுந்த அழகன் மீது பஸ் சக்கரங்கள் ஏறியதாகவும், அழகன் ஸ்தலத்திலேயே மரணமானதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பஸ்ஸையும் சாரதியையும் வவுனியாப் பொலிஸார் காவலில் வைத்துள்ளனர். (அ)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான காளயுக்தி ஆண்டு வைகாசித் திங்கள் 18-ம் நாள் (1-6-1978) வியாழக்கிழமை இரவு 11-00 மணியளவில் வரும் சுபவேளையில்

யாழ்ப்பாணம், புளியங்கூடல்
திரு. பொ பொன்னுச்சாமி அவர்கள்
சிரேஷ்ட புத்திரன் திருநிறைசெல்வன்
**நாகராஜா அவர்களுக்கும்**
(இலங்கை வான்படைத் தலைமையகம்)

யாழ்ப்பாணம்,
திரு. க. இராசதுரை அவர்கள்
சிரேஷ்ட புத்திரி திருநிறைசெல்வி
**இரஞ்சிதமலர் அவர்களுக்கும்**

திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் நடைபெற இருக்கும் திருமண வைபவத்திற்கு தாங்கள் சமூகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தயவுசெய்து கவனிக்க! கடுக்கன் பூணல் 1-6-78 பகல் 12 மணிக்கு மணமகன் இல்லம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்!

**பொ. பொன்னுச்சாமி தம்பதிகள்**
அதிபர்,
யாழ். வேலணை நடராஜா வித்தியாலயம்,
புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

9444

**க. இராசதுரை தம்பதிகள்**
ஏஜண்ட்,
யாழ்மார்க் குளிர்பானங்கள்,
உரிமையாளர்: பிள்ளையார் ஸ்ரோர்,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

# திருமண அழைப்பு

மணமகன்:- செல்வன் இ. ஜெகதீசன்
(நீதிக்கிளை, யாழ். வளாகம்)

மணமகள்:- செல்வி சந்திரிகாதேவி
(பரீட்சைக்கிளை, யாழ். வளாகம்)

இடம்:- நல்லூர் சிவன் கோவில்

காலம்:- காலயுக்தி ஆண்டு வைகாசி
24-ந் திகதி (7-6-78) புதன்கிழமை
மாலை 5-00 மணி முதல் 6-30 மணி வரை

உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்புகள் இல்லையென்பதை தயவு செய்து கவனிக்கவும்.

செ. செல்லையாவும் பாரியாரும்
15/6, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

இ. இரத்தினமும் பாரியாரும்
உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

9432

## காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை போசனசாலை

## (தாளுகவொழித்தல்)

தாளுகவொழிக்க முன்வந்திருக்கும் மேலே குறிப்பிட்ட போசனசாலை சம்பந்தப்பட்ட கடன்காரர்கள் மேற்படி நோக்கத்துக்காக ஒழிப்போனால் நியமிக்கப்பட்ட திகதியாகிய 1978-06-15-ந் திகதிக்கு முன் தங்களின் பெயர், விலாசம், கடன்கள் பற்றிய விபரங்கள் ஆகியவற்றை ஒழிப்போனாகிய காங்கேசன்துறை, காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை, உள்ளகக் கணக்குப் பரிசோதகர் திரு. ஏ. ஈ. சாதுசிகாமணிப்பிள்ளை அவர்களுக்கு தேவைப்பட்டால் ஒழிப்போனிடமிருந்து எழுத்து மூலமான அறிவித்தலின் பேரில் வந்து தமது கடன்களை அல்லது உரிமை கோரல்களை நிரூபிக்குமாறு கோரப்படுகின்றார்கள். 1978-06-15-ந் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் சகல உரிமைக்கோரல்களும் கால வதியானவையென நிராகரிக்கப்படும்.

தாளுகவொழிப்போன்
ஏ. ஈ. சாதுசிகாமணிப்பிள்ளை.

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை,
1978-05-29. 9441

## உப்பு ஆறு என்றழைக்கப்படும் கைதடி — கோப்பாய் கடல்நீர்ஏரியில் இருந்துகழிமண் தோண்டி எடுக்கவும், காங்கேசன் சிமெந்து தொழிற்சாலைக்கு நாளொன்றுக்கு 150 தொன் கழி மண் கொண்டுபோய் கொடுக்கவும்

# கேள்வி விண்ணப்பம்

மேற்காட்டிய வேலையை மேற்கொள்வதற்கு காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை தொழில் முகாமையாளரால் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு அமைவாக அரக்குமுத்திரை வைக்கப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(அ) மேலே காட்டிய வேலைகளைச் செய்வதற்கு கேள்வி விண்ணப்பங்கள் அனுப்ப விரும்புவோர் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை தொழில் முகாமையாளருக்கு விண்ணப்பித்தல் வேண்டும். மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணம் ரூபா 50-00 ஒவ்வொரு மனுப்பத்திரத்துடனும் அனுப்பப்படவேண்டும்.

(ஆ) கேள்விப்பத்திரங்கள் 5-6-78 தொடக்கம் 9-6-78 நண்பகல் 12-00 மணி வரையில் வழங்கப்படும்.

(இ) 14-6-78 பிற்பகல் 2 மணியுடன் கேள்விவிண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வது முடிவடையும்.

தொழில் முகாமையாளர்.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை,
காங்கேசன்துறை.
29-5-1978. 9435

## விண்ணப்ப அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் கொக்குவிலைச் சேர்ந்தவரும் இல. 2, பிரம்மெல்லாக், சிங்கப்பூர் 15ல் வசித்தவருமான மரணித்த இரத்தினசபாபதி பொன்னையா என்பவரின் மரணசாதன விடயமாக

இல. த. 3372

இன்னும்

1977-ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட 20-ம் இலக்க குடியியல் நடைமுறை திருத்தச் சட்டத்தின் 544 பி பிரிவின் கீழ் வெளியான மரணச்சொத்து நிர்வாகத் தத்துவப்பத்திரம் அங்கீகரிப்பதன் கீழ் இலச்சினை இடுவதற்குமான விடயம்.

இன்னும்

1970-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25-ந் திகதி சிங்கப்பூர் மேல் நீதிமன்றத்தால் மரணச்சொத்து நிர்வாகப் பத்திரம் அளிக்கப்பட்டவர்களுமான சுவாமிநாதன் மகனும் இரத்தினசபாபதி கைம்பெண்ணுமாகிய பராசத்தியும் பொன்னையா இரத்தினசபாபதி மகன் இராசேந்திரமும் ஆகியவர்களின் அற்றோணி தத்துவகாரன் மானிப்பாயைச் சேர்ந்த குமாரலிங்கம் மகேஸ்வரன்

விண்ணப்பகாரன்

இத்திகதியிலிருந்து பதினாலு 14 நாட்களுக்குப் பின்பு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்துக்கு மேற்குறிப்பிட்ட கொக்குவில் வாசியும் தற்காலிகமாகச் சிங்கப்பூரைச் சேர்ந்தவருமான காலஞ்சென்ற பொன்னையா இரத்தினசபாபதியின் மரணசாதனம் ஒப்பேற்றப்பட்டு சிங்கப்பூர் மேல் நீதிமன்றத்தில் 1970-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25-ந் திகதி T33 (1970) இலக்கங்கொண்ட மரணச்சொத்து நிர்வாக தத்துவப்பத்திரத்தை 1977-ம் ஆண்டு 20 ஆம் இலக்கம் கொண்ட குடியியல் நடைமுறைத் திருத்தச்சட்டத்தின் 544 U பிரிவின் கீழ் இந்நீதிமன்றத்தின் இலச்சினை இடுவதற்கு ஓர் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இ. சிவசுப்பிரமணியம்,
விண்ணப்பகாரன்
சட்டத்தரணி.

இ. சிவசுப்பிரமணியம்,
சட்டத்தரணி & நொத்தாரிஸ்
230, சேர் பொன் இராமநாதன் றோட்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்;
1-6-1978 9439

## புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## வெற்றுச்சாக்கு கேள்விப் பத்திரம்

மேற்படி சங்கத்தில் 8000 வெற்றுச்சாக்குகள் வரை கேள்விப்பத்திரமூலம் விற்பனைசெய்வதற்கு இருக்கின்றது. கேள்விப் பத்திர விண்ணப்பத்திற்கு ரூபா 5/-ம், வைப்புப் பணமாக ரூபா 50/-ம், செலுத்தப்படவேண்டும். கேள்விப்பத்திரங்கள் 10-6-78 பி. பகல் 4 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் என்வலப்பின் இடது பக்க மூலையில் 'கேள்விப்பத்திரம்' என எழுதப்பட்டு, பொதுமுகாமையாளர், புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கம், புங்குடுதீவுக்கு முகவரியிட்டு அனுப்புதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
புங்குடுதீவு.
29-5-78, 9433

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

இல. 84 அ — பிரிவுகள் 524, 532

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு அச்சுக்கூட ஒழுங்கை, சிவசுப்பிரமணியம் பெண் பரமேஸ்வரி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்து விடயத்தில்.

மரணமெய்தியவர்
சபாரட்ணம் பாலாபரணம், புகையிரதவீதி,
கொக்குவில்.

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம்
இல. த. 3363

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு ஆனி மாதம் 7-ம் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
பதிவாளர்.

1978 ம் ஆண்டு வைகாசி மாதம் 10-ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

வரைவு:
ஒப்பம்
இ. சிவசுப்பிரமணியம்,
மனுதார் சட்டத்தரணி.

9385

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

இல, 84 அ — பிரிவுகள் 524, 532

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு அச்சுக்கூட ஒழுங்கை பொன்னையா சிவசுப்பிரமணியம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்
சபாரட்ணம் பாலாபரணம், புகையிரத வீதி,
கொக்குவில்.

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம்
இல. த. 3364

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1978-ஆம் ஆண்டு ஆனி மாதம் 7-ம் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி.
பதிவாளர்.

1978 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 10-ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

வரைவு
ஒப்பம்
இ. சிவசுப்பிரமணியம்,
மனுதார் சட்டத்தரணி

6386

# வரி விளம்பரம்

## தேவை

தேவன்ஸ் சீயாக்காய்ப் பவுடர், மற்பொடி பைக்கற் ஒட்டுவதற்கு பெண்பிள்ளைகள் தேவை. தேவாஸ் இறைண்டிங் மில், 67, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9423

மின் இணைப்பு வேலை, மோட்டர் திருத்துதல், நிலைவண்டிங் மற்றும் வயர் இணைத்தல் போன்ற வேலைகளுக்கு அனுபவமுள்ளவர்களும் பழகுபவர்களும் தேவை. யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் படித்த சான்றிதழ் உள்ளவர்கட்கு முதலிடம் வழங்கப்படும். சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 9426. மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.

9426

இளிநொச்சி விவசாயப் பாடசாலைக்கு ஓர் சமையல்காரர் தேவை. மாதம் 150ரூபாவும் உணவும் தங்குமிடவசதியும், செய்து கொடுக்கப்படும்; மேலும் விபரங்கட்கு: "மாணவர் தலைவர்", விவசாயப் பாடசாலை, கிளிநொச்சி.

9442

## விற்பனைக்கு

பேர்ஜோ 504 இங்கிலாந்தில் தனிப்பட்ட பாவனையாளரிடம் இருந்து இலங்கைக்கு முன் இறக்குமதி செய்யப்பட்ட 58,000 ஓடிய வெள்ளை நிற 1972 மொடல். எல்லா விதத்திலும் சிறந்தது. மதிப்பு 140.000/- யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி. யோர்ஜ் ஜராச், வெள்ளி 2-ந் திகதி யூன் 1978 (2-6-78) பார்வையிடலாம். 9437

## வகுப்புகள்

G. C. E. A/L வகுப்புக்கள், A/L ஆவணி 79 நடைபெறுகின்றன. A/L Repeat (April 79) அடுத்தவாரம் ஆரம்பம். ● தாவரவியல் செல்வி ராஜரட்ணம், நேரம் 2-45 p. m. சனி, 6-30 a. m. ஞாயிறு, கில்னர் அகடமி - யாழ்ப்பாணம். 9436

## CLASSES

I. C. M. A. (A & B) Chartered Preliminary commencing 3-6-78, 1-30 p m. Jaffna Education Centre- 22, Ramiah Chettiyar Lane, Jaffna. 9440

## ஜே.பிக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் காசிப்பிள்ளை கணேசன் நீதிஅமைச்சினால் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டதைப் பாராட்டி சங்க நிர்வாக சபைஉறுப்பினர்கள் அவருக்கு தேநீர் விருந்துபசாரம் ஒன்றை அளித்தனர். இவ்வைபவத்தில் திருமதி கணேசனும் கலந்து கொண்டார். (இ)

## இவரே தலைமைவகித்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதியில், கடந்த ஞாயிற்றுக்கிழமை மாவத்தம, தெனியாய, பலாங்கொடை எம். பி.க்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்திற்குத் தலைமை வகித்தவர் அல்ஹாஜ் மௌலவி எம். ஐ. எம். மீருன் முகியித்தீன் ஆலிம் ஆவார்.

மௌலவி முகம்மது நிலாவுதீன் தலைமைவகித்தார் என்று திங்கள்கிழமை 'ஈழநாடு' இதழில் இருந்தது தவறுதலாகும்.

ஈழநாடு
The Eelanaadu

## அரசாங்க ஊழியர்

அரசாங்கத்துறை அலுவலகங்கள் திறமையாக இயங்கச் செய்யும் பொருட்டு புதிய கட்டுத்தாபனம் ஒன்றை உருவாக்குவது பற்றி அரசாங்கம் பரிசிலனை செய்து வருகிறதாம்.

அரசாங்க அலுவலகங்கள் பலவற்றிலும் ஒழுங்காகவும் திறமையாகவும் அலுவல்கள் நடைபெற வில்லையென்றும் பல அலுவலகங்களில் பெருந்தொகையான ஊழியர்களிருந்தும் திறமையின்மையும் காலதாமதமும் நிலவுவதாகவும் ஜனாதிபதிக்குப் பல புகார்கள் கிடைத்திருக்கின்றன;

மேலதிக ஊழியரை வேறு இடங்களுக்கு மாற்றுவதும் அலுவல்களுக்குத் தடை ஏற்படுத்துவோரை அதற்கு விசேஷ கட்டுத்தாபனம் ஒன்றில் வைப்பதுமே இப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான வழி என்று ஜனாதிபதி தீர்மானித்துள்ளாராம்.

வயல்களில் உற்பத்தி அதிகரிக்க வேண்டுமானாலும் தொழிற்சாலைகளில் உற்பத்தி உயர வேண்டுமானாலும் அரசாங்கத் திணைக்களங்களில் சுறுசுறுப்பாகவும் திறமையாகவும் அலுவல்கள் நடைபெற வேண்டியது அவசியம்.

அரசாங்க ஊழியர் பலர் சோம்பேறிகளாக இருப்பதாக சமீபத்தில் வெளியான புள்ளி விபரம் ஒன்று தெரிவித்தது உண்மையே. ஆனாலும் இதர துறைகளிலுள்ள ஊழியர்களுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் அரசாங்க ஊழியரின் நிலைமை மேலானதே உள்ளது.

ஆனால் அரசாங்க சேவையிலுள்ள பலர் ஏதோ தானே என்ற மனோபாவத்துடன் வேலை செய்வது ஒரு தொற்றுவியாதி மாதிரிப் பரவிவிட்டது.

ஊழியர்களின் அசமந்தப் போக்கினால் விவசாயியும் தொழிலாளியும் தான் வெகுவாகப் பாதிக்கப் படுபவர்கள். இதனால் நாட்டின் உற்பத்தி பாதிக்கப் படுகிறது.

அரசாங்க அலுவலகங்களில் திறமையின்மையும் மந்தகதியில் அலுவல்கள் நடைபெறுவதற்கு மற்றொரு காரணம் கட்சி அரசியல் என்றும் சொல்லலாம்.

அரசியல் அடிப்படையில் நியமனங்களும் பதவிஉயர்வுகளும் வழங்கப்படுவதால் ஆட்சி பீடத்தில் மாற்றம் ஏற்படும்போது அரசாங்க அலுவலகங்களிலும் இது எதிரொலிக்கிறது.

ஆட்சிபீடத்துக்கு எந்தக் கட்சி அல்லது எவர் வந்தாலும் அரசாங்கத்தின் கொள்கையையும் திட்டங்களையும் செயல்படுத்த வேண்டியது அரசாங்க ஊழியரின் கடமையும் பொறுப்புமாகும்.

நாட்டுக்கும் மக்களுக்கும் விசுவாசமாக நடந்து கொள்ள வேண்டியதுதான் தனது தலையாய கடமை என்பதை அரசாங்க ஊழியர் ஒவ்வொருவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

## யாழ்ப்பாணப் பகுதியில் ஜனத்தொகை

## 25 வருடங்களில் இரட்டிப்பாகிறது

### மிகையான குடிசனப் பெருக்கம் நலிவுக்கு வழி செய்கிறது என்கிறார் பேராசிரியர்

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பகுதியில் சனத்தொகை விரைவாகப் பெருகிவருகின்றது; 1946ம் ஆண்டில் சதுர மைலுக்குரிய சனத்தொகை 745 ஆகவிருந்தது. இத்தொகை 1971ல் 1518 ஆக அதிகரித்தது. இருபத்தைந்து ஆண்டுகளில் சனத்தொகைப் பெருக்கம் இருமடங்கிற்குச் சற்று அதிகமாக அதிகரித்துள்ளது. உலக சனத்தொகை ஏறத்தாழ 35 வருடங்களுக்கு ஒருமுறை இரட்டித்து வருகின்றவேளையில், யாழ்ப்பாணப்பகுதியில் 25 வருடங்களில் இரட்டித்து வந்துள்ளது விவசாய நிலத்திற்குரிய சராசரி அடர்த்தியைப் பார்க்கும் பொழுது சதுரமைல் ஒன்றில் 4000 பேருக்கு மேற்பட்ட குடித்தொகை உண்டு. குறித்த சில பகுதிகளில் அடர்த்தி மேலும் அதிகமாகும். தலைக்குரிய விவசாய நிலத்தைப் பார்க்கும்பொழுது 1971ம் ஆண்டில் ஆளொன்றுக்குக் கால் ஏக்கருக்கும் குறைவான நிலம் காணப்பட்டது. தோட்டநிலம், நெல்நிலம் என்பன மிகமிகச் சிறியனவாகவிருக்கும்."

"இவ்வாறு யாழ். வளாக புவியியல்துறை பேராசிரியர் கூறினார்.

புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற யாழ் மாவட்ட குடும்பசுகத் திட்டப் பிரிவினரின் அரசாங்க ஊழியருக்கான கருத்தரங்கில் கலந்துகொண்டு "யாழ் மாவட்டக் குடிசனப் பரம்பலும்மூலவளப் பயன்பாடும்" என்னும் பொருள்பற்றி பேசுகையிலேயே பேராசிரியர் செல்வநாயகம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

யாழ்ப்பாணப்பகுதியில் ஏறத்தாழ 60 வீதமான நிலமே பயன்பாட்டில் உள்ளது. எஞ்சிய பகுதி மணல், சதுப்பு நிலம், கற்பாறைகள் என்பனவற்றைக் கொண்டதாய் தற்பொழுது பயனற்றதாக உள்ளது. பயன்பாட்டிலுள்ள 60 வீதமான நிலத்திலும் பெரும்பகுதி மனை வீட்டுநிலம் என்பனவற்றைக் கொண்டுள்ளது. உண்மையான விவசாய நிலம் மிகக் குறைவாகும். இந்நிலத்தில் தான் நெல், தோட்டப்பயிர்கள், விளைவிக்கப்படுகின்றன. குடிசனம் பெருகிவருவதனால் இத்தகைய பயனுள்ள நிலங்கள் அருகிவிட்டன. அதனோடு வீடுகள், கட்டிடங்கள் மூதலியவற்றிற்காகவும் நல்ல தோட்ட நிலங்கள் முதலியன பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணப் பகுதியின் ஏனைய வளங்களாக மீன்வளம் உப்பு, சுண்ணக்கல், கண்ணாடி மணல் முதலியன காணப்படுகின்றன. மீன்பிடித் தொழில் அண்மைக் காலத்தில் அதிக அளவுக்கு விருத்தியடைந்து வந்துள்ளதோடு மீன்வளம் பாதிப்பும் சில இடங்களில் தோன்றியுள்ளது. உப்பு, சீமெந்து உற்பத்திகளிலும் பெருக்கமுண்டு இரசாயனத் தொழிலும் உப்புப்படிவைத் துணையாகக் கொண்டு அமைந்துள்ளது. விவசாயப் பொருள்களைத் துணையாகக்கொண்டுஞ் சில கைத்தொழில்கள் அமைந்துள்ளன. இவை தவிர வேறு குறிப்பிடத்தக்க வளர்ச்சி குறைவாகும். மிகையான குடிசனப் பரம்பல் காரணமாக இப்பகுதியின் வளப்பயன்பாடு அதிகரித்து வந்திருப்பதோடு பல்வேறு நிலைகளில் பாதிப்புக்கள் அண்மையில் ஏற்பட்டுள்ளன.

நன்னீர்த்தட்டுப்பாடு, நன்னீர் உவராகிவருதல், விவசாய நிலத்தட்டுப்பாடு, நல்ல நிலங்கள் பிறதேவைகளுக்காகப் பயன்படுத்துதல் போன்ற பல பிரச்னைகள் இப்பொழுது அதிகரித்துவருகின்றன. ஆகவே மூலவளங்களின் தன்மை, பயன்பாடு ஆகியவற்றிற்கேற்பக் குடிசனபரம்பல் அமைந்திருப்பதோடு அயலாகவுள்ள மாவட்டங்களைச் சார்ந்து மக்கள் பரந்து வாழ்வதும் அவசியமாகும்.

## "சுவீப் சுந்தரம்பிள்ளை"

(உருத்திரபுரம்)

கிளிநொச்சி கணேசபுரம் கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

அன்று பகல் ஆலயத்தில் கணேசபுர மக்களால் அன்னதானம் வழங்கப்பட்டது. இரவு கிளிநொச்சி ஹரே கிருஷ்ண நாடகமன்றத்தினரின் "சுவீப் சுந்தரம்பிள்ளை" என்ற நாடகம் 9வது முறையாக மேடையேற்றப்பட்டு ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றது. (உ)

## போக்குவரத்துக்கு இடைஞ்சல்

(இணுவில்)

தாவடிக்கும், கோண்டாவிலுக்குமிடையே காங்கேசன் துறை வீதியில் பொதுவேலைப் பகுதியினரால் கொட்டப்பட்டுள்ள கற்கள் பாதசாரிகளுக்கும், வாகனங்களில் செல்வோருக்கும் பெரும் இடைஞ்சல் விளைவிப்பதாக இருக்கின்றன.

பல காலமாக தேடுவாரற்று இருக்கும் இக் கற்களால் அடிக்கடி சிறு விபத்துக்களும் ஏற்படுகின்றன. அண்மையில் இதன் காரணமாக சைக்கிளில் வந்த ஒருவர் காரினால் மோதுண்டு பலத்த காயத்துக்குள்ளாகினார். (இ)

## மணிவாக்கு

நமது மனச்சாட்சிக்கு எதிராக நாம் செயல்படக் கூடாது; —காந்தியடிகள்

சன்சோனிக்கமிஷன்:

## "எவ்வித அரசியல் தொடர்பும் எனக்கில்லை"

### மடு பாதிரியார் சாட்சியம்

(கண்டி)

"நான் இலங்கையில் எந்த ஒரு தேர்தல் கூட்டத்திலும் கலந்து சென்று பேசியது கிடையாது. 'எந்தவித அரசியல் தொடர்பும் எனக்குக் கிடையாது.' என்று கண்டியில் நடைபெற்ற சன்சோனிக் கமிஷன் விசாரணையில் மடுக் கோயில் நிர்வாகப் பொறுப்பாளர் வண. பிதா சார்ள்ஸ் செந்தில்வேல் சாட்சியமளிக்கையில் கூறினார்.

வவுனியாவில் நடைபெற்ற தேர்தல் கூட்டம் ஒன்றில் நான் பேசியதாகக் கூறப்பட்டது பொய்" என்றும் அவர் சொன்னார்; (உ)

## குளிப்பதற்கு நீரில்லை

(கரணவாய்)

கரவெட்டி அத்துளுச் குளத்தின் நீர்மட்டம் குறைந்துவிட்டதால் கிழக்கிதோட்டம், கரவெட்டி கிழக்கு, சம்பந்தர் கடைப்பகுதி, கிராமக்கோப் பகுதி மக்கள் குளிப்பதற்குப் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள்.

இப்பகுதியிலுள்ள ஒரே பொது குளமான இக்குளத்தைச் சுற்றியுள்ள கிணறுகளிலிருந்து நீர் வேளாண்மைச் செய்கைக்கு பயன்படுத்தப்படுவதனால் இணற்றுநீரைக் கூடக் குளிப்பதற்கு பயன்படுத்த முடியாமல் மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள்'

மக்களில் பலர் நெல்லியடிப் பகுதியிலுள்ள தமது உறவினர்களின் கிணறுகளை நாடிச் செல்லவேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

## "தமிழர் என்னை பொல்லால் தாக்கினர்"

### சில்வா சாட்சியம்

(கண்டி)

"புங்கங்குளம் ரயில் நிலையத்தில் வைத்து சிற்றுண்டிச்சாலைப் பெட்டிக்குள் ஏறிய கோஷ்டியினர் என்னைப் பொல்லால் தாக்கினர். நான் சுகமடைய 18 நாட்கள் சென்றன.'

இவ்வாறு கண்டியில் சன்சோனிக் கமிஷன் விசாரணையில் அம்பலாங்கொடை ஊருவத்தையைச் சேர்ந்த டி.எஸ். டி. சில்வா என்பவர் சாட்சியமளிக்கையில் கூறினார்.

"இலங்கை ரயில்வே உணவுச் சாலையில் 17 வருடங்களாக நான் பணியாற்றுகிறேன். ஆகஸ்ட் 16-ம் திகதி என்னை ரயிலில் தாக்கியது தமிழர்களே" என்றும் சாட்சி சொன்னார். (உ)

## அராலி அம்பாள் சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மாள் வருடாந்த சங்காபிஷேகம் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவிருக்கிறது.

அன்று காலை அம்பாளுக்கு நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும் விசேஷ பூசை ஆராதனைகளும் நடைபெறும். பகல் ஒருமணியளவில் அன்னதானமும் இடம்பெறும். யாழ்ப்பாண இசையாளர் சங்க ஆதரவில் விசேஷ நாதஸ்வர மேளக் கச்சேரிகள் இடம் பெறும்;

இரவு நிகழ்ச்சிகளாக யாழ் இசையாளர் சங்க ஆதரவில் நாதஸ்வர தவில் கச்சேரிகளும், வயலின் கச்சேரி, இன்னிசைக்கச்சேரி, வில்லிசை, நவீன இசைநிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறும்.

மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் அம்பாள் வீதிஉலா வருவார்; (அ)

## கௌரவம்

(யாழ்ப்பாணம்)

கான சுதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா பாகவதர் கோண்டாவில் குமரகோட்டம் ஸ்ரீ ஞானவைரவர் கோவிலில் நிகழ்த்திவந்த கம்பராமாயண விரிவுரையின் பூர்த்தி விழாவில் ஆசிரியர் முத்துத்தம்பியினால் கோண்டாவில் அன்பர்கள் சார்பில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

## உரும்பராயில் சங்காபிஷேகம்

(உரும்பராய்)

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோவிலில் நாளை வெள்ளிக்கிழமை பகல் விசேஷ சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

மலேசியாப் பிரமுகர் திரு. மார்க்கண்டு செல்லத்துரையின் உபயமாக நடைபெறும் இச் சங்காபிஷேக வைபவத்தைப் பிரதமசிவாசாரிய ஸ்ரீ. வை. சபாரத்தினக்குருக்கள் நடாத்தி வைப்பார். (அ)

மரம்நடும் இயக்கம்:

## இன்று வயாவிளான் ம.வித்தியாலயத்தில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைத் தோட்டங்களிலும் மாணவர்களின் வீட்டுத் தோட்டங்களிலும் பயன்தரும் மரங்களை நடும் இயக்கம் ஒன்றினைக் கல்வி அமைச்சு ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றின் ஆரம்பமுயற்சியாக, வடமாநிலப் பாடசாலைகளில் மரம் நாட்டும் இயக்கத்தை வடமாநில வித்தியாதிபதி திரு தி மாணிக்கவாசகர் ஆரம்பித்துள்ளார்.

இன்றுவியாழக்கிழமை வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் விவசாயப்பிரிவில் வாழை, திராட்சை, வெங்காயம் போன்ற பல பயிர்களை வித்தியாதிபதி நாட்டவிருக்கின்றார்.

கல்லூரி அதிபர் திரு. ஆ. இராமசாமி தலைமையில் நடைபெறும் - இவ் வைபவத்தில் ஆசிரியர்கள் உட்பட பலர் சொற்பொழிவாற்றுவர்.

பர்மா அகதிகளுக்கு

# 1 கோடி 55 லட்சம் டாலர் சேகரிக்கிறது ஐ. நா.

நியூயோர்க், மே. 31

பங்களாதேஷில் உள்ள ஒன்றரை லட்சம் அகதிகளுக்காக ஒரு கோடி 55 லட்சம் டாலர் பணத்தை உலக நாடுகளிலிருந்து வசூலிப்பதற்கான விண்ணப்பங்களை ஐக்கியநாடுகள் சபை கோரியுள்ளது.

உலகநாடுகளிலிருந்துசேகரிக்கப்படும் இப்பணத்திலிருந்து அகதிகளுக்கு உணவு, உடை, மருந்து ஆகியன வழங்கப்படுமென்று ஐ. நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## 2 லட்சமாக அதிகரிக்கலாம்

இதேவேளையில், அகதிகள் பர்மாவிலிருந்து நாளாந்தம் பெருந்தொகையாக பங்களாதேஷுக்கு வந்துகொண்டிருப்பதால் அங்கு அகதிகளின் தொகை விரைவில் 2லட்சமாக அதிகரிக்கலாமென டாக்காவில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

# 16 ஆபிரிக்க நாடுகளில் உணவுப் பஞ்ச அபாயம்!

லண்டன், மே: 31

எதியோப்பியா, சாடு, அங்கோலா, ஸாம்பியா உட்பட 16 ஆபிரிக்க நாடுகளில் கடும்வரட்சி காரணமாக உணவுப்பஞ்சம் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதாக உலக உணவு விவசாய ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட நாடுகளை எதிர்நோக்கியுள்ள உணவுப் பஞ்சத்தை தவிர்ப்பதற்கு இந்நாடுகள் உணவுப்பொருட்களை பெருமளவில் சேகரித்துவைக்க வேண்டுமென்றும், வெளிநாடுகளிலிருந்து உணவுப்பொருட்களை இறக்குமதிசெய்யவேண்டுமென்றும் இந்நிறுவனம் தெரிவித்துள்ளது. (இ)

ஹிந்தி மொழிப் பிரச்னை:

# எம்ஜிஆரின் ஆலோசனைக்கு கேரள முதல்வர் ஆதரவு

சென்னை, மே. 31

ஹிந்திமொழிப் பிரச்னை குறித்து ஹிந்திமொழி பேசாத மாநில முதலமைச்சர்களுடன் மத்திய அரசு பேச்சுவார்த்தை நடத்தி இப்பிரச்னைக்குத் தீர்வுகாண முன்வரவேண்டுமென்ற தமிழ்நாடு முதல்வர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரனின் ஆலோசனைக்கு கேரளமுதன் மந்திரி திரு. ஏ. கே. அன்ரனி ஆதரவு தெரிவித்தார்.

ஹிந்திமொழிப் பிரச்னை குறித்து மத்திய அரசு அதிகாரிகளுடன் பேச்சுநடத்துவதற்கு முன்னர், ஹிந்திமொழிபேசாத மாநிலமுதல்வர்கள் ஒன்றுகூடி இவ்விவகாரம் குறித்து ஆலோசனை நடத்தவேண்டுமென்றும் திரு. அன்ரனி தெரிவித்தார். (இ)

# பொலிஸ்சுட்டதில் 6 பேர் பலி!

பீகார், மே: 31

பீகார் மாநிலத்தின் நகர் ஒன்றில் பஞ்சாயத்து தேர்தலின் போது இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்களைத்தொடர்ந்து பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததையடுத்து 6 பேர் பலியானார்களென்றும் 23 பேர் காயமடைந்தார்களென்றும் அறிவிக்கப்பட்டது. (இ)



## பாதுகாப்பு, நம்பிக்கை, சௌகரீகம்

இத் தனிச் சிறப்புக்கள், இலங்கை அடங்கிலுமுள்ள, முதலீடு செய்வோர்களிடையே பொது வழக்குச் சொற்களாகி, ஹவுஸ் அன்ட் புரொப்பெர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்டின் முதலீட்டு திட்டங்களுக்கு சிறந்த மவுசை ஏற்படுத்தியுள்ளன.

நீங்கள் முதலீடு செய்யும்போது உங்கள் பணத்திற்கு சம்பூரணமான முதலீட்டு பாதுகாப்பு அளிக்கப்படுகிறதா என்பதையும் அவ்வாறுனமுதலீடு சராசரி வருமானத்திற்கு மேற்பட்ட வருமானத்தையும் உத்தரவாதங்களையும், தனிப்பட்ட விசேஷ சேவை வசதியையும் அளிக்கிறதா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். இவ் வசதிகளை எம்மிடம் முதலீடு செய்வோர் சுமார் இருபது ஆண்டுகளாக பெற்று இன்புற்றுவருகிறார்கள்.

## முதலீட்டுத் திட்டங்கள்

| குறுகிய காலம் | நீண்ட காலம் | கால வைப்புகள் |
|---|---|---|
| 12% | 17 1/2% | 18% |
| "முதலீட்டு சான்றிதழ்" வட்டியுடன் முதலீடு செய்த பணத்தை வட்டியுடன் இலகுவில் மீட்டுக்கொள்ளலாம்: | 1 வருடம் - 14 1/2% வருடமொன்றுக்கு<br>2 வருடம் - 15% வருடமொன்றுக்கு<br>3 வருடம் 15 1/2% வருடமொன்றுக்கு<br>4 வருடம் - 16% வருடமொன்றுக்கு<br>5 வருடம் - 16 1/2% வருடமொன்றுக்கு<br>6 வருடம் - 17 1/2% வருடமொன்றுக்கு<br>முதலீட்டை அனுகூலங்களுடன் மீட்டுக்கொள்ளலாம். | 6 மாதங்கள் - 12% வருடமொன்றுக்கு<br>12 மாதங்கள் - 15% வருடமொன்றுக்கு<br>18 மாதங்கள் - 18% வருடமொன்றுக்கு<br>முதலீட்டை அனுகூலங்களுடன் மீட்டுக்கொள்ளலாம். |
| மாதாந்த வட்டி | மாதாந்த வட்டி | முதிர்ச்சியின் பேரில் வட்டி |

HPT GROUP

**ஹவுஸ் அன்ட் புரொப்பெர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்,**

HPT பில்டிங், கொழும்பு-8 த. பெ. இல. 1077.

ரெலெக்ஸ்: 1203 கொழும்பு, போன்: 94356. 94320

கிளை அலுவலகங்கள்;

★ 2 - 3, நவீன சந்தை, வெரியகடை, யாழ்ப்பாணம். தொலை பேசி: 7698

8, புத்தளம் ரோட், குருணாகல்: ★(RAVI)

# ருமேனிய அதிபரின் இந்திய விஜயம்

## தேசாயுடன் பேச்சுநடத்தினர்

புதுடில்லி, மே; 31

இந்தியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ருமேனிய அதிபர் திரு. செளசெஸ்கு சீன- இந்திய உறவு குறித்தும், உலக படைக்குறைப்பு குறித்தும் இந்தியப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

2 மணித்தியாலங்கள் வரை நீடித்த இப்பேச்சுவார்த்தையின் போது மற்றும் பல சர்வதேசப் பிரச்னைகள் குறித்தும் இருவரும் பேச்சு நடத்தினர், சீன-இந்திய உறவு மேம்பாடடையதாகக் காணப்படுவதாகவும் இருநாடுகளுக்குமிடையிலான நல்லுறவுகள் மேலும் அபிவிருத்தி அடையுமென்றும் சீன அதிகாரிகள் தம்மிடம் நம்பிக்கைதெரிவித்துள்ளதாகவும் ருமேனிய அதிபர் இந்தியப்பிரதமரிடம் தெரிவித்தார்.

### தேசாய்க்கு அழைப்பு

ருமேனிய அதிபர் திரு. செளசெஸ்கு தமது நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு விடுத்த அழைப்பை திரு. தேசாய் ஏற்றுக்கொண்டார். (இ)

# "தமிழர் ஒற்றுமை குலைய இடமளியாதீர்"

— சாவகச்சேரி எம். பி.

(கொடிகாமம்)

"எம்மத்தியில் ஏற்பட்டுள்ள ஒற்றுமையை எவரும் குலைத்துவிடாதவகையில் நாம் செயற்படவேண்டும்" என்று சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாசாலையில் நடைபெற்ற சாவகச்சேரித்தொகுதி கட்டளை அமைப்பாளர்கள் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

சமுதாயஅமைப்பில் மாற்றம் தேவை என்றும் அவர் குறிப்பிட்டார். (உ)

சாவகச்சேரியில்

# மழைநீர் சேகரிப்புத் திட்டம் ஆரம்பிக்க முயற்சி

(மட்டுவில்)

சாவகச்சேரித் தொகுதியில் மழைநீர் சேகரிப்புத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கான முயற்சியில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

இந்தமழைநீர் சேகரிப்புத் திட்டத்தின்கீழ் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் பயனடைவார்கள் என்றும், உணவு உற்பத்தி பெருக்கமும் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதிஒதுக்கீட்டின் கீழ் இந்த மழைநீர் சேகரிப்புத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான முயற்சியில் திரு. நவரத்தினம் எம். பி. ஈடுபட்டுள்ளார்.

அல்லிக்கரை, அம்பலந்துறை ஆகிய வயல் வெளிகளிலிருந்து வீணே கடலில் சென்று கலக்கும் மழைநீரை வீணைவேலி வயல் பகுதியிலுள்ள தாழ்ந்த பிரதேசமான தரவைப் பகுதியில் இந்த மழைநீர் சேகரிப்புத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் இப்பொழுது மேற்கொள்ளப்படுகிறது.

நீர்ப்பாசன இலாகா அதிகாரிகள், பொறியியலாளர்கள் ஆகியோர் இதற்கான இடங்களை நேரில் வந்து பார்வையிட்டுச் சென்றனர்.

இத்திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் இந்த வயல்வெளிகளில் இருபோக நெற்செய்கையை மேற்கொள்ள முடியும் என்றும் உப உணவு உற்பத்தியிலும் விவசாயிகளுக்கு நீர்ப்பஞ்சம் ஏற்படாது என்றும் கருதப்படுகிறது. (உ)

# வியட்னும் மீது சீன குற்றச்சாட்டு

பீக்கிங், மே. 31

வியட்னாமிலிருந்து சீனாவுக்குச் சென்றுகொண்டிருந்த சீன அகதிகள் மீது வியட்னும் ராணுவவீரர்கள் துப்பாக்கியால் சுட்டனர் என்று சீனா குற்றம் சாட்டியுள்ளது.

இரண்டு படகுகளில் சென்ற 53 அகதிகள் மீது 24வியட்னும் வீரர்கள் துப்பாக்கியால்சுட்டனர் என்றும் சீனா தெரிவித்துள்ளது. (இ)

# இருவர் சரணடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி, மறவன்புலோ எனுமிடத்தில் நிகழ்ந்த படுகொலை தொடர்பாக இருவர் சாவகச்சேரிப் பொலிஸில் சரணடைந்தனர்.

யாழ்ப்பாண பஸ் சாலையைச் சேர்ந்த கண்டக்டரான செல்வராசா கடந்த சனிக்கிழமை அடித்துக் கொலை செய்யப்பட்டார் வி. தியாகராஜா, என். ராஜரத்தினம் ஆகிய இருவரும் நேற்று முன்தினம் சரணடைந்தனர். சாவகச்சேரிப் பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர்.

